**கொத்மலை பிரதேச சபை - 2024**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கொத்மலை பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானம் மற்றும் செலவினக் கணக்கு மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களுக்குரிய பொழிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10(1) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களிலிருந்து 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கொத்மலை பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக் கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும்

எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வின் விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்.

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட கட்டளைகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்பட்டுள்ளதா எனவும்.

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்.

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.6 நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

**கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு உடன்படிக்கை செய்யப்படாத 15 அபிவிருத்தி திட்டங்களுக்குரிய ரூபா 6,554,000 கூட்டுதொகையான கடன் கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2025 இன் இறுதிக் கணக்கில் சீர் செய்வதாக. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் நகர சபை மண்டபத்தை திருத்துவதற்காக செலவிடப்பட்ட ரூபா 1,247,976 தொகை மூலதனம் ஆக்கப்பட்டிருக்கவில்லை. | 2025 இன் இறுதிக் கணக்கில் சீர் செய்வதாக. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |

### 1.7 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன

| | சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | **1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டம்** | | | |
| | 24 (1) (அ), (ஆ) பிரிவு | சபையினால் பராமரிக்கப் படுகின்ற வீதிப் பதிவேட்டில் 518 வீதிகள் காணப்பட்ட போதும் வீதிகள் தொடர்பான தரவு நாளது வரையாக்கப்பட்டு | நிதி ஏற்பாட்டை பெற்றுக் கொள் வதற்கு முடியான சந்தர்ப்பத்தில் அளவீட்டு | வீதிகளை வர்த்தமானி யில் வெளியிடு வதற்குரிய நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | வர்த்தமானியில் வெளியிடப் பட்டிருக்கவில்லை. | நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டு கட்டம் கட்டமாக வர்த்தமானிக்கு வெளியிடுவதற்கு அனுப்பி வைப்பதாக. | களை மேற்கொள்ள வேண்டும். |
| (ஆ) **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்**<br>நி.பி. 571(3) | 2021 முதல் – 2022 காலப் பகுதிக்குரிய ரூபா 800,832 கூட்டுத்தொகையான காலாவதியான ஆன 15 வைப்புக்கள் தீர்வு செய்யப்படவில்லை.<br>. | வைப்புக்களை தீர்வு செய்வதற்கு அல்லது வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக. | காலாவதியான வைப்புக்களை தீர்வு செய்தல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 59,482,393 ஆக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 55,828,777 ஆக இருந்தது.

**2.2 வருமான நிர்வாகம்**

**2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2024 | | | | 2023 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட் ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 14,010,000 | 19,676,362 | 15,659,584 | 10,484,230 | 19,939,000 | 16,749,870 | 14,198,053 | 6,805,497 |
| (ii) | வாடகை | 8,500,700 | 20,432,439 | 20,181,537 | 3,431,012 | 11,629,000 | 9,790,886 | 9,443,236 | 3,393,610 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 9,886,000 | 12,626,302 | 12,626,302 | - | 14,398,500 | 13,194,254 | 13,194,254 | |
| (iv) | ஏனைய வருமானம் | 119,523,642 | 28,194,158 | 33,774,760 | 12,281,834 | 95,269,000 | 88,648,333 | 95,232,603 | 13,452,356 |
| | | 151,920,342 | 80,929,261 | 82,242,183 | 26,197,076 | 141,235,500 | 128,383,343 | 132,068,146 | 23,651,463 |

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | **வீதவரி** | | |
| | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு ரூபா 6,247,258 ஆன வீதவரி நிலுவையில் 1 ஆண்டிற்கும் 3 இற்கும் இடைப்பட்ட காலமாக 1494 வீதவரி அலகுகளில் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 3,306,596 தொகையும் 3 ஆண்டிற்கும் 5 இற்கும் இடைப்பட்ட காலமாக 339 வீதவரி அலகுகளில் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,002,235 தொகையும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட 486 வீதவரி அலகுகளில் இருந்து ரூபா 1,452,584 ஆக இருந்தது. 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 158 ஆம் பிரிவின் நடவடிக்கை எடுத்து நிலுவை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவையை அறவிடுவதற்காக நிகழ்ச்சி திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு எதிர்வரும் மாதத்திற்குள் நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | நிலுவை வருமானத்தை விரைவில் அறவிடப்பட வேண்டும். |
| **(ஆ)** | **நீர் கட்டணங்கள்** | | |
| | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 3,392,705 கூட்டுத் தொகையான நிலுவையில் 01 ஆண்டிற்கும் 03 இற்கும் இடைப்பட்ட காலமாக 139 அலகுகளில் இருந்து ரூபா 1,153,080 தொகையும் 3 ஆண்டிற்கும் 5 இற்கும் இடைப்பட்ட காலமாக 18 அலகுகளில் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 103,770 தொகையும் அறவிடப்பட்டிருக்க வில்லை. | நிலுவையை அறவிடுவது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டு எதிர்வரும் இரண்டு மாதங்களில் நிலுவை நீர் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | - மேற்படி -. |
| **(இ)** | **கழிவுப்பொருள் கட்டணங்களை** | | |
| | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 812,390 கூட்டுத்தொகையான நிலுவையில் 01 ஆண்டிற்கும் 03 இற்கும் இடைப்பட்ட காலமாக 50 அலகுகளில் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 348,368 தொகையும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலத்தை மிகைத்துள்ள 07 அலகுகளில் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 60,470 தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை இரண்டு மாதங்களுக்குள் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக. | - மேற்படி -. - |
| **(ஈ)** | **முச்சக்கர வண்டிக் கட்டணங்கள்** | | |
| | மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா 3,430,760 கூட்டுத்தொகையான முச்சக்கர வண்டி நிறுவையில் 01 ஆண்டிற்கும் 3 இற்கும் இடைப்பட்ட கால பகுதியில் 225 முச்சக்கர வண்டிகளில் இருந்து ரூபா 1,354,850 தொகையும் | நிலுவையை அறவிடுவதற்காக சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கு உரிய | - மேற்படி -. |

| | | |
|---|---|---|
| 3 இற்கும் 05 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாக 54 முச்சக்கர வண்டிகளில் இருந்து ரூபா 793,450 தொகையும் 05 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலமாக 29 முச்சக்கர வண்டிகளில் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 640,150 தொகையும் அளவிடப்பட்டிருக்கவில்லை. | ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு நீதிமன்றத்திற்கு ஒப்படைப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக. | |
| **(உ) அறிவித்தல் பதாதை** | | |
| மீளாய்வாண்டின் ஆரம்ப திகதியில் காணப்பட்ட ரூபா 487,800 ஆன நிலுவை அறிவித்தல் பதாகை கட்டணங்களில் இருந்து எவ்வித தொகையும் மீலாய்வாண்டில் அறவிடப்பட்டு இருக்கவில்லை ஆண்டில் பட்டியலிடப்பட்ட வருமானங்களில் அறவிடப்படாதிருந்த ரூபா 37,600 ஆன நிலுவையுடன் ஆண்டில் இறுதி திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 525,400 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை தொகையை அறவிட வேண்டிய திகதிகளை கண்டுபிடித்து நீதிமன்றத்திற்கு விடயங்களை அறிக்கையிட்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | நிலுவை வருமானத்தை விரைவில் அறவிடப்பட வேண்டும். |
| **(ஊ) நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்** | | |
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 410,945 மற்றும் முத்திரைக் கட்டணங்கள் ரூபா 11,223,300 ஆக இருந்தது. | பெறவேண்டிய தொகையை மாகாண சபை இடமிருந்து பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | பெற வேண்டிய வருமானத்தை கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்தால் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 வெளிப்படையான மோசடிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஹெல்பொட உப அலுவலகத்தில் தொழிலாளர் பதவியில் சேவையில் ஈடுபட்டிருந்த ஊழியர் ஒருவர் 2023 ஆம் ஆண்டில் உப அலுவலகத்தின் அதிகார பிரதேசத்தில் அமைந்துள்ள வியாபார நிறுவனங்களிடமிருந்து பற்றுச்சீட்டுக்களை வழங்காமல் அனுமதிப்பத்திரக் கட்டணங்களாக ரூபா .317,559 தொகையை அறவிட்டு சபை நிதியத்திற்கு செலவு வைக்காமல் முறைகேடு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்த ஊழியர் தொடர்பாக புலனாய்வு நடவடிக்கைகள் மேற்கொண்டு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | ஆரம்ப பரிசோதனை ஒன்று மேற் கொள்ளப்பட்டுள்ளதுடன் அந்த அறிக்கை கிடைத்த பின்னர் நடவடிக்கைகள் எடுப்பதாக. | புலனாய்வு நடவடிக்கைகளை விரைவில் பூர்த்தி செய்து பரிந்துரைகள் செயற்படுத்தப்பட வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய நிர்மாண கடன்பட்டோர் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 11,543,243 ஆக இருந்தது. அதில் 1 - 3 ஆண்டிற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் மொத்தம் ரூபா 942,419 ஆகவும் 3 - 5 ஆண்டிற்கும் இடைப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 172,372 ஆகவும் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கூட்டுத்தொகை ரூபா 3,747,048 என பெறவேண்டிய மீதியாக இருந்தது. | அறவிடப்பட வேண்டிய எஞ்சிய மீதியை தீர்வு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை விரைவில் மேற்கொள்வதாக. | பெற வேண்டிய கடன் மீதிகள் அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய நிர்மாண கடன்கொடுத்தோர் மீதிகள் ரூபா 104,362,542 ஆக இருந்தது. அதில் 1 - 3 ஆண்டிற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் கூட்டுத்தொகை ரூபா 1,618,337 ஆகவும் 3 - 5 ஆண்டிற்கும் இடைப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 6,516,499 ஆகவும் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கூட்டுத்தொகை ரூபா 2,143,126 என தீர்வு செய்யப்படாத மீதியாக இருந்தது. . | நிதி ஏற்பாடு கிடைக்காததன் பேரில் செலுத்தப்படாத நிறுத்தி வைத்தல் தொகை மற்றும் கொடுப்பனவு செய்வதற்குள்ள நிறுத்தி வைத்தல் தொகையும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ள துடன் தற்போது கொடுப்பளவு செய்யப்பட்டு வருவதாக. | செலுத்த வேண்டிய கடன் கொடுத்தோர் மீதிகளை தீர்வு செய்தல் வேண்டும் |

## 3.3 விளைவற்ற அல்லது குறை பயன்பாடுடைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 02 ரூட் 29.9 பேர்ச் அளவிலான காணி ஒன்று பிரதேச செயலகத்தினால் 2023 மார்ச் 23 ஆம் திகதி கொள்வனவு செய்யப்பட்டு திண்மக்கழிவு பொருள் முகாமைத்துவ நடவடிக்கைகளுக்காக சபைக்கு கையளக்கப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டு இறுதி திகதி வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அடுத்த ஆண்டில் வேலி எல்லை அமைத்து நிர்மாண நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | சபைக்கு சொந்தமான ஆதனங்கள் பாவனைக்கு எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) ரூபா 534,402 பெறுமதியான 02 பிணியாளர் வண்டிகளைத் திருத்தியமைத்து பயன்படுத்து வதற்கு நடவடிக்கை எடுக்காமல் 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக விளைவற்று குறைபாட்டுடன் காணப்பட்டது. | கூறு விலை கோரிய போதும் கூறு விலைகள் சமர்ப்பிக்கப் படவில்லை என்பதாக. | திருத்தி அமைத்து பயன்பாட்டுக்கு எடுக்கப்பட வேண்டும். |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மல்தெனிய அரசின் இல்லம் மஹவலி பாலர் பாடசாலையின் விளையாட்டு உபகரணங்கள்' மற்றும் கொத்மலை பொது வாரச்சந்தை கட்டிட என்பன திருத்தம் செய்யப்படாமல் அழிவடைவதற்கு இடமளிக்கப்பட்டுள்ளது. | உத்தியோகபூர்வ இல்லத்தை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் வாரச் சந்தை கட்டிடத்தை அகற்றி சபைக்கு வருமானம் ஒன்று கிடைக்கக்கூடிய வகையில் வேறு வியாபாரம் ஒன்றுக்காக பயன்படுத்த நடவடிக்கை எடுப்பதாகவும். | சபை ஆதனங்களை திருத்தி பயன்பாட்டுக்கு எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டில் ரூபா 1,049,655 செலவிடப்பட்டு புதிய உதிரிபாகங்கள் பயன்படுத்தி நிர்மாணிக்கப்பட்ட ஹரங்கள உப அலுவலகத்தின் மலசலகூடங்களை மீளாய்வாண்டு இறுதித் திகதி வரையிலும் பாவனைக்கு எடுக்கப்படாமல் அழிவடைவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது . | நீர் கசிவு ஒன்று காணப்படுவதுடன் பரீட்சித்து உரிய நிலைக்கு கொண்டு வருவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தொழில்நுட்ப உத்தியோத்தருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளதாக. | மலசல கூடங்களை குறைபாடுகள் பூர்த்தி செய்யப்பட்டு பயன்பாட்டுக்கு எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | மத்திய மாகாண சபையிடமிருந்து கொத்மலை பிரதேச சபைக்கு வழங்கப்பட்டிருந்த மோட்டார் வாகனத்தின் உரித்து கையேற்கப்பட்டிருக்க வில்லை. | உரித்தினை கையேற்பதற்காக கடித ஆவணங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக. | மோட்டார் வாகனத்தின் உரித்து கையேற்கப்பட வேண்டும். |

## 3.5 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளவாறான பதவியணியினருடன் ஒப்பிடும் போது 06 பதவிகளில் 21 வெற்றிடங்கள் காணப்பட்டன. | ஆட்சேர்ப்பு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக . | அத்தியவசிய வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். |
| (ஆ) | இடமாற்றம் பெற்றுச் சென் உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து ரூபா 92,431 தொகையான கடன் மீதியொன்று 09 ஆண்டுகள் காலமபாக அறவிடப்பட்டிருக்கவில்லை. | கடன் தொகையை தீர்வு செய்யுமாறு தொடர்ந்து வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ள போதும் தீர்க்கப் படவில்லை என்பதாக. | ஊழியர் கடன்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |